# பாராளுமன்றமே மீயுயர் தன்மை கொண்டது
# சட்டவாட்சியே ஜனநாயகத்தின் வாழ்விடம்

**( சட்டத்தரணி கனக நமநாதன் )**

குடிமக்களின் இறைமை பிரதிநிதிகளை தெரிவு செய்யும் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலம் பாராளுமன்றத்துக்கு கையளிக்கப்படுகின்றது. இறைமையை தன்னகத்தில் கொண்டே பாராளுமன்றம் என்ற சட்டசபை மக்களுக்காக சேவை செய்வதற்கு சட்டங்களை இயற்றுகின்றது. சட்டசபை இயற்றும் சட்டங்களை ஆதாரமாகக் கொண்டே நிறைவேற்றுத் துறையினர் தங்களது பணிகளை செய்ய முடிகின்றது. அதேபோன்று நீதித்துறையினரும் சட்டசபை இயற்றும் சட்டங்களை பின்பற்றியே தனது தீர்ப்புக்களை கூற முடிகின்றது. இந்த விளக்கமே கூறப்பட்ட இரு துறைகளையும் சட்டமாக்கும் துறை தன் கட்டுக்கோப்பில் வைத்திருக்கின்றது என்பதைக் காணலாம். அதனாலேதான் பாராளுமன்றம் மீயுயர் தன்மையைக் கொண்டதாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

பாராளுமன்ற இறைமைக் கோட்பாடு பின்வரும் அம்சங்களை கொண்டதாக உள்ளது.

1. பாராளுமன்றம் தன் விருப்பப்படி எச்சட்டத்தையும் இயற்ற முடியும்.
2. பாராளுமன்றம் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது.
3. பாராளுமன்றம் தனக்கெதிராக எந்த சட்டசபையினையோ ஆளையோ அங்கீகரிப்பதில்லை.
4. பாராளுமன்ற இறைமையை நீதிமன்றங்களும் அங்கீகரிக்கின்றன. இதன்படி நீதிமன்றங்கள் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட எச் சட்டத்தையும் வலிமையற்றதாக்க முடியாது. அத்துடன் ஒரு பாராளுமன்றச் சட்டம் எவ்வாறு இயற்றப்பட்டிருக்கின்றது என்பது பற்றியும் நீதிமன்றங்கள் ஆராய மாட்டாது.

இறைமையை தன்னகத்தே கொண்ட பாராளுமன்றம் தேவையென கருதுமிடத்து அதன் அங்கத்தவர்கள் சகலரையும் உள்ளடக்கிய ஒரு அரசியலமைப்பு நிர்ணய சபையை உருவாக்கலாம். அவ்வாறான சபையினால் நாட்டின் தன்மை குடியுரிமை மொழியுரிமை அதிகாரத்தைப் பகிர்தல் மற்றும் நாட்டை ஆட்சி செய்வதற்குரிய சகல விடயங்கள் பற்றியும் மக்களின் சுதந்திரங்கள் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் சட்டம் ஒழுங்கு பற்றியும் வெளிநாடுகளுடனான கொள்கைகள் பற்றியும் சட்டவாட்சி பற்றியும் வலுவேறாக்கல் தத்துவம் நீதிமன்றச் சுதந்திரம் பற்றியும் நிதிக்கொள்கைகள் பற்றியும் வேறும் இன்னாரென்ன விடயங்களுக்குமாக ஒரு திட்டத்தை உருவாக்கும். இதனையே அரசியலமைப்புச் சட்டமென கூறப்படுகின்றது. இவ்வாறாக இறுதியாக இயற்றப்பட்டு 1978ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு இன்றும் அது வலுவிலுள்ளது.

இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரமே சகல அரசாங்க வேலைகளும் இயங்குகின்றன. இங்கு அவதானிக்கப்பட வேண்டியது என்னவெனில் பாராளுமன்றம்

இயற்றும் சட்டங்கள் நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு அமைவாகவே இருத்தல் வேண்டும் என்பதாகும். இதன் காரணமாகவே இயற்றப்பட்ட சட்டம் அரசியலமைப்புச் சட்டவிதிகளுக்கு முரணாக உள்ளதா என அறிய உயர்நீதிமன்றத்தின் கருத்தை கேட்டுக்கொள்ளுதல் வேண்டும்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை முக்கியமாக மூன்று அம்சங்களைக் கொண்டதாகப் பிரிக்கலாம்.

1. சட்டமியற்றும் துறை (Legislative)
2. நிறைவேற்றுத் துறை (Executive)
3. நீதித் துறை (Judiciary)

**சட்டமியற்றும் துறை**

ஒரு ஜனநாயக நாட்டில் அரசாங்கத்தைக் கொண்டு நடாத்த குடிமக்கள் தங்களிடமுள்ள இறைமையைப் பயன்படுத்தி தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்கின்றார்கள். தெரிவு செய்யப்பட்வர்கள் ஒன்று கூடி பாராளுமன்றம் என்ற சட்டமாக்கும் சபையை உருவாக்குகின்றார்கள். இந்த சட்டமியற்றும் சபை மக்களின் சமூக மேம்பாடு பொருளாதார வளர்ச்சி வாழ்வியல் பிரச்சினை கலை கலாச்சார விழுமியங்களின் தேவைக்கான சகல விடயங்கள் சார்பாகவும் சட்டங்களை இயற்றி நியதிச் சட்டங்களாக வெளியிடும்.

அவ்வாறு இயற்றப்பட்ட நியதிச் சட்டங்களை தெளிவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்தும் விதத்தினை அந்த விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சராக இருப்பவர் தனது அமைச்சைக் கொண்டு பிரமாணங்களை உருவாக்கி சட்டமியற்றும் சபையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பித்து அதனை துணைநிலைச் சட்டமாக நிறைவேற்றுவார்கள்.

**நிறைவேற்றுத்துறை**

சட்டவாக்கம் செய்யும் துறையினரால் உருவாக்கப்பட்ட நியதிச் சட்டங்களையும் அதற்கு விளக்கமளிக்கும் பிரமாணங்களையும் எல்லைகளாகக் கொண்டு அந்த விடயத்துக்கு பொறுப்பான திணைக்களம் சுற்றிக்கைகளைத் தயாரித்து அதன்படிச் செயற்படுத்துவதற்காக பிராந்திய மாவட்ட மட்டத்திலுள்ள திணைக்களங்களுக்கும் அதன்மூலம் பிரதேச கிராம உப அலுவலகத்திற்கும் கிளைகளுக்கும் அனுப்பிவைக்கும்.

அந்த சுற்றறிக்கையை அடிப்படையாக வைத்து மாவட்ட பிரதேச கிராம அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் அவற்றை நடைமுறைப்படுத்தி சட்டத்தின் நோக்கத்தையடைய வேலை செய்வார்கள்.

**நீதித் துறை** சட்டத் துறையினால் இயற்றப்பட்ட நியதிச்சட்டங்களை நிறைவேற்றுத் துறையால் சரிவர செயற்படுத்தப்படுகின்றதா என்னும் கண்காணிப்பு அதிகாரத்தை நீதித்துறைக் கொண்டுள்ளது. குடிமக்களுக்கிடையே இணக்கப்பாடின்றி எழும் வாழ்வியல் சமூக பொருளாதார கலை கலாச்சார ஆன்மிக

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விடவும் அரச நிறைவேற்றுத் துறையினர் சட்டத்தை மதித்து சரியான விதத்தில் சட்டத்தினால் எண்ணப்பட்டுள்ள திட்டங்களை அதன்படியே சிறப்பானதாக அமுல்படுத்துகின்றதா என்று அவதானித்துக் கொண்டும் இருக்கும்.

இந்த மூன்றுத் துறைகளும் வெவ்வேறாக செயற்பட்டு இயங்க வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு துறையின் அங்கத்துவம் கடப்பாடு தொழில் ஆகியவற்றில் ஏனைய துறையினருக்கு சம்பந்தம் இருக்கக் கூடாது என்பதும் வலுவேறாக்கக் கோட்பாடு (Separation of Powers) என்ற தத்துவத்தில் காணப்படுகின்றது.

இறைமைத் தத்துவத்தின் (sovereignty) செயற்பாட்டினால் குடிமக்களின் இறைமை தங்களது பிரதிநிதிகளினூடாக பாராளுமன்றம் என்னும் நிறுவனத்திற்கு கையளிக்கப்படுவதால் அது சட்டமியற்றும் மீயுயர்த் தத்துவம் கொண்டது என மாற்றம் பெறுகின்றது.

நிறைவேற்றுத் துறையினரால் நடத்தப்படும் ஆட்சி அதிகாரம் சனாதிபதி (கபினெற்) அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை மூலமாக நடைபெறுகின்றது.

அந்த ஆட்சி சர்வாதிகாரமற்ற ஆட்சியாக இருக்க வேண்டுமாயின் நாட்டின் சட்டமே மீயுயர்ந்ததாக இருக்க வேண்டும். இதனையே சட்டவாட்சி (Rule of Law) எனக் கூறப்படுகின்றது. இதன்படி மூன்று துறையினர்களும் தத்தமது கடைமைகளை எவ்வாறு சட்டத்தின் ஏற்பாடுகளின் படி வரம்பு மீறாமல் செயற்பட வேண்டும் என்ற நடைமுறை விதிகளை சட்டவாட்சித் தத்துவம் கொண்டுள்ளது.

சட்டவாட்சியை சிறந்த முறையில் கொண்டு நடாத்துவதற்கான வழிவகைகளை கண்டறிந்து பிழைகள் ஏற்படின் நிவர்த்தி செய்வதற்கே நிருவாகச் சட்டம் உருவாக்கப்பட்டு அதன் செயன்முறை விரிவாக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்றுத் துறையினரால் குடிமக்களின் உரிமைகள் மீறாதவாறு கட்டுப்படுத்துவதே நிர்வாகச் சட்டத்தின் நோக்கமாகும்.

ஆகவே நிர்வாகச்சட்டத்தின் மூலம்:

அ. சட்டவாட்சித் தத்துவம் ஒழிக்கப்படாமல் சாதாரண மக்களின் உயர்ந்த பட்ச சுதந்திரத்தைப் பாதுகாக்கக் கூடிய விதத்தில் நிறைவேற்றுத் துறையினர் நடந்து கொள்வதை நிச்சியப்படுத்திக் கொள்ளுதல்.

ஆ. அரசாங்க கொள்கை பெரிதா அல்லது நீதிமன்றத்தின் தீர்ப்பினால் நிர்வாகிகள் கட்டுப்படுத்த வேண்டியது தேவையா?

இ. நலன்புரி அரசாக இருக்குமாயின் ஒவ்வெரு தொழில் துறையையும் கொண்டு நடாத்தும் கூட்டுத்தாபனங்களை நிதிமன்றத்தின் மூலம் கட்டுப்படுத்தக் கூடிய வழிகள் என்ன?

ஈ. சட்டத்துறையின் சட்டமாக்கும் தங்களது அதிகாரத்தைக் கொண்டு நீதிமன்றங்களின் அதிகாரங்களை அகற்றி விடுதலை அங்கீகரிக்கலாமா?

என பல பிரச்சினைகளுக்கு நிர்வாகச்சட்டம் பரிகாரம் காணும்.